யாழ்ப்பாணத்து பொலிகண்டி

# கந்தவனநாதர்

98

# நான்மணிமாலையும் பதிகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை
திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணத்துப் பொலிகண்டி கந்தவனநாதர்

# நான்மணிமாலையும் பதிகமும்

இவை
யாழ்ப்பாணத்து நவாலியூர்
தமிழ்ப்புலவர்
திரு. க. சோமசுந்தரம்பிள்ளை அவர்களால்
இயற்றப்பட்டு

ஆக்கியோன் துணைவனும் மாணாக்கனுமாகிய
திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால்
பதிப்பிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முருகனின் விடை தேடி வந்தது"

ஞானச்சுடர் எனும் மாத இதழை உலகம் எவ்வாறு வரவேற்கிறது என்பதற்கு இந்தச் செய்தி அனுசரணையாக அமைகிறது. 2006 ஆனிமாத இதழில், பக்கம் இருபத்தொன்றிலே, நிலையொன்றி நீ வருந்த வேண்டாம் எனும் தலைப்பிலேயமைந்த சிறுகட்டுரை உயிர் பெறுகிறது. 1928 ஆம் ஆண்டிலே பொலிகண்டிக் கந்தவனம் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகளிடத்தே எழுந்த, தீராத பக்தியினால் நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் அவர்களியற்றிய "கந்தவனநாதர் நான்மணிமாலை" எனும் நூல், முதுமையின் காரணமாக மிகவும் ஒடிந்த நிலையில், தன்னந்தனிமையாக இருந்தவேளை அதனது மகிமைகருதி, அற்புதம் கருதி, தேவை கருதி ஆறுமுகப் பொன்மலை கருதி மீள்பதிப்புச் செய்ய வேண்டுமென்ற திருவருள் எனக்குள் நிரம்பியது. ஞானச்சுடர் எனும் சஞ்சிகை முருகனுக்குகந்த வாலாயமான இதழாக உலகெங்கணும் பவனி வருவதனால், அந்நூலின் பேரருட்பிரவாகத்தைப் பற்றி எழுதி, மீள்பதிப்புச் செய்யவல்ல புண்ணிய சீலர்களைச் சந்நிதிமுருகன் தேடித் தருவதற்காகப் பிரார்த்தித்திருந்தேன். முருகன் கைவிடவில்லை. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் முருகன், இலண்டனில் வதியும் **திரு.திருமதி. பாலயோகன் குடும்பத்தவர்களின் மனங்களில் நிறைந்து.** பொலிகண்டிக் கந்தவனநாதரின் நான்மணிமாலையை மறுபதிப்புச் செய்வதற்கு திருவருள் பாலித்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக எவரிடமோ விண்ணப்பிக்காது, ஞானச்சுடர் மூலம் விண்ணப்பித்தமையால் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அறப்பணி, முருகனின் அங்கீகாரத்தையும், உலகத்தவர்களின் ஆதரவினையும் பெறுகிறது.அடுத்து ஞானச்சுடரின் ஒவ்வொரு சிறு விடயத்தையும் ஆயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் முருகனடியார்கள், முருகனின் பிரசாதமாகவே கருதுகின்றார்கள். ஐந்து ரூபா முத்திரையொட்டிய கடிதம் ஒரு அறப்பணிக்கு வித்திட்டது மாத்திரமல்லை, ஊக்கமும் அளித்திருக்கிறது. இந்த அறப்பணிக்கு இப்போது மட்டுமல்ல, எப்போதுமே திரு.திருமதி பாலயோகன் குடும்பத்தவர்கள் நன்கு பரிச்சயமானவர்கள். என்னிடம் தொலைபேசி இணைப்பு இல்லாத காரணத்தினால் எனது மூத்த சகோதரர் மூலமாக, நூலினை அச்சேற்றுமாறு என்னைப் பணித்திருக்கிறார்கள். அவர்கள் வேறு யாருமல்லர். எனது அக்காவும் அத்தானுமே தாம். எது எவ்வாறாயினும் சந்நிதி முருகனும், கந்தவன முருகனும் விடை தந்து நிறைவான கைங்கரியத்தை அனுகூலமாக்கியுள்ளனர்.

கே.எஸ். சிவஞானராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை
திருச்சிற்றம்பலம்

# கந்தவன வரலாறு

நான்முகக் கடவுளின் மைந்தருள் ஒருவராகிய காசியர் என்பவர் வானுறவோங்கிய வடமலை யொருபால் தேனுறு நறுவிரைச் செழுமலர்ச் சோலையில் தவஞ் செய்து கொண்டிருந்தபொழுது அசுரர் குருவாகிய சுக்கிராசாரியாரின் சூழ்ச்சியினால் விடுக்கப்பட்டு அங்கே போன அவுணர் மன்னன் மகள் மாயை என்பவளைக் கண்டு காமுற்றுக் கலந்து சூரபன்மன், சிங்கன், தாருகன் என்னும் மைந்தர் மூவரைப் பெற்றார்.

அம்மைந்தர்கள் சிவபெருமானை உன்னி நெடுங்காலங் கொடுந்தவம் புரிய, அவர் வெளிப்பட்டு அவர்களுக்கு வேண்டிய வரங்களை அருள் செய்தார். அவர்களுள் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு ஊழிகால மாளும் பெரும் பேறும், வச்சிர யாக்கையும், மாயமான் தேரும் படைக்கல வலியும் பெற்றுப் பூமியிலே கடல் நடுவிலே மகேந்திரபுரி என்னுங் கடிநகர் ஒன்று இயற்றுவித்து அங்கே துணைவரும் மைந்தரும் புறங்காப்ப இணையிலாச் சிறப்போடிருந்து அரசாண்டு வருவானாயினான்.

அவன் தனது குலப்பகைவராகிய திருநெடுமால் முதலானோரைப் போரிலே புறங்கண்டு வென்று அவர்கள் வளங்களைக் கவர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவன வரலாறு

இந்திரனைப் பொன்னாடு விட்டுத் துரத்திச் சயந்தனைச் சிறை செய்து, தேவர்களை இழிதொழிற் குற்றேவல் செய்வித்து மிகவும் வருத்தி வருவானாயினான்.

அசுரர் செய்யும் பெருந் துன்பத்தை ஆற்ற முடியாது மனம் நொந்து வருந்திய இந்திரன் முதலியோர் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை அடைந்து திருமுன்பே விழுந்து வணங்கி எழுந்து நின்று "உலக மாதாவாகிய பச்சைப் பசுங்கொடி ஒருபாற் படரப் பவளமலைபோல வீற்றிருந்தருளுங் கற்பகத் தருவே! எம்பெருமானே! இமையவர் தலைவா! தக்கன் வேள்வியில் தகர் தின்று சிவநிந்தை கேட்ட பெருங் கொடும் பாவத்துக்காக அசுரரால் தண்டனையடைகின்றோம். இனித் தாங்ககில்லேம்-அருட் பெருங் கடலே! அபயம் அபயம் காத்தருள்க!" என்று முறை செய்து குறையிரந்து நின்றார்கள்.

"அம்மையப்பராக விருந் தாருயிர்க் கருளபொழியு மையன் தேவர்களை அஞ்சலீர்" என்று அமைந்தருளித் தாம் ஓர் குழந்தை வடிவங்கொண்டு அவர்களுக்கு அருள்புரியுமாறு திருவுள முகிழ்த்திருந்தார்.

அப்பொழுது "அருவமும் உருவுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற" அவருடைய அருட் பெருஞ் சோதியிலிருந்து மூவிருமுகமும் ஆறிரு நோக்கமும் பன்னிரு தோளும் பரிபுரத் தாளுமாய்க், கட்டிளமையும் தெய்வ மணமும், கழிபேரின்பமுங், கடவுள் நலனும் கனியுந் திருவுருவும், முருகனென்னுந் திருப்பெயருங் கொண்டு உலகமெல்லாம் உய்யும்படி குழந்தை நாயகப் பெருமான் தோன்றியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவன வரலாறு

"அருவமும் உருவுமாகி அனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங் குதித்தனன் உலகமுய்ய"

அருளொழுக அழகொழுகும் அற்புத வடிவங்கொண்டெழுந்த குழந்தைநாயகப்பெருமானை எம்பெருமானும் எம் பெருமாட்டியும் வாரி எடுத்து மடிமேலிருத்தி உச்சிமோந்து அன்பு பாராட்டினார்கள்.

எம்பெருமான் அவ்வறுமுகம் படைத்த திருவருட் குருந்தை நோக்கி "என் அருட்கண்மணியே! குழந்தாய் சூரபன்மன் என்னும் அசுரனாலும், அவனுடைய துணைவராலும் பரிசனங்களாலும் தேவர்கள் பெரிதும் வருந்தாநின்றனர். அவர்களுடைய வருத்தத்தை நீக்கிக் காப்பது உன் கடன்" என்று மணிவாய் மலர்தலும் குமரப்பெருமான் திருவுளம் மகிழ்ந்து வீரவாகு முதலிய தம்பிமாருடனும் தேவர் சேனைகளுடனும் சேனைத் தலைவராய்ச் சென்று, வழியிலே தாருகனைக் கிரௌவுஞ்ச மலையோடும் அழித்து, உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவா யணிநகரடைந்து, வீரவாகுதேவரைத் தூதாக விடுத்துச் சூரனுள்ளமறிந்து, அவன் போருக்குடன்பட்டமையால் மகேந்திரபுரிக்குப் போய் சூரனுடன் போர் செய்து மைந்தரும் துணைவரும் வான் படை வீரரும் இறந்துபோகத் தனித்துவந் தெதிர்த்த அவனுடைய மாயவலியை நீக்கி மலர்க்கரத்தேந்திய வடிநெடுவேற்படையால் வச்சிர யாக்கையை இருகூறாக்குதலும், வேறுபட்ட இருகூறும் மரகத மயிலுஞ் சேவலுமாய் வர, வாகனமுங் கொடியுமாக்கி ஆண்டருள் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவன வரலாறு

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றாற்
தூயவ ராகிமேலைத் தொல்கதி யடைவரென்கை
யாயவும் வேண்டுங்கொல்லோ வடுசம ரிந்நாட்செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா வருள்பெற்றுய்ந்தான்"

பின்பு தேவர்கள் சிறையுங் குறையுந் தீர்த்து விண்ணகங் குடிபுகுந்து மிகு மகிழ்ச்சியோடு வாழ வைத்து, முன்னே தமது திருவடிகளையடைய விரும்பிப் பேரன்புடன் தவம் செய்து தமது கட்டளைப்படி வானவர்கோன் மகள் தெய்வ யானையாகவும், மலைக்குற மன்னன் மகள் வள்ளிநாயகியாகவும் சென்று வளர்ந்துவந்த அமுதவல்லி சுந்தரவல்லி என்னும் திருமால் மக்கள் இருவரையும் உலகியல் முறைப்படி கற்புங் களவுங் காட்டித் திருமணஞ் செய்யும் திருவிளையாடலில் வைத்து ஞானமும் தொழிலும் என்னும் அருட் பெருங் குணங்களோடு வேறற நிறுத்தி ஆட்கொண்டருளினார்.

"கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவதாகி
வல்லியர் கிரியைஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்து பலநெறி காய்த்திட்டன்ப
ரெல்லவர் தமக்குமுத்தி யிருங்கனி யுதவு மென்றும்"

பின்பு அம்மைமாரிருவரோடும் திருப்பரங்குன்றம் திருக்கந்தவெற்பு முதலாகிய அற்புத தலங்களிலே தன்னுடைய அருட்திருக் கோலத்தைக் காட்டி அடியார்க்கருளிக் கோயில் கொண்டெழுந்தருளினார்.

பின்பு உலகத்துயிர்களெல்லாம் உறுதிப் பயனை யடைந்துய்யும்படிக்குக் "காடுங் காவும் கவின்பெறு துரத்தியும், யாறுங் குளனும் வேறுபல்வைப்பும், சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடம்பும், மன்றமும் பொதியிலும்'' குன்றிலும், மற்றும் அடியார் பரவிய இடங்களிலும் தமது திருக்கோலத்தைக் காட்டி அவர்களுக் கருள்பாலித்து வருகின்றவர். இலங்கைத் தீவின் வடபாலிலே விளங்காநின்ற யாழ்ப்பாண நாட்டிலும் பற்பல இடங்களில் தமது மணங்கமழ் தெய்வத்திளநலங் காட்டி அருள்புரிய மெய்யன்பர் ஆங்காங்கு திருத்தளி சமைத்து அருட்குறி நிறுத்தி வழிபட்டு வருவாராயினர்.

இங்ஙனம் வழிபட்டு வந்த அற்புத தலங்களுள்ளே கந்தவனம் என்னும் திருத்தலம் மிகப் பழமைபெற்று விளங்காநின்றது. இது யாழ்ப்பாணத்து வல்லிபட்டித்துறைக்குக் கிழக்கே, பருத்தித்துறைக்குப் போகும் வழியில் பொலிகண்டி என்னும் ஊரில் கடலருகே அமைந்துள்ளது. இது விரிதலைத் தெங்கும் பொரியரை யிருப்பையும் முடந்தாட் பலவும் நெடுந்தாட் பெண்ணையும் கண்ணுடைக் கரும்பும் விண்ணுயர் பூகமும் தீம்பழக் கதலியும் மாம்பழ மரங்களும் வானுயர் வன்னியும் தேனலர் படப்பையும் புடைசூழ மாதவர் மடங்களும் ஓதனச் சாலையும் நறுநீரக் கூவலும் மறுவின்றி விளங்க, வருட்பொலிவோடு சிறப்புடன் திகழ்கின்றது.

முற்காலத்தில் திருமாலும் நான்முகனும் தேவர்களும் வழிபாடு செய்ய அவர்களுக்கு நல்லருள் பாலித்த அற்புதத் தலம் இதுவென்று தக்கணகைலாயமான்மியம் கூறுகின்றது.

எட்டிகுடி எண்கண் முதலாய திருக்கோயில்களில் நிறுத்திப் பூசிக்கப்படுவதுபோன்ற திருவுருவம் ஒன்று இங்கேயும் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்தது. அது சில காலத்துக்கு முன்னே உறுப்பு ஒன்றில் ஊறடைந்தமையினாலே திருக்கோயில் உள்வீதி வடபுறத்திலே மல்லிகை மலர்க் கொடி சூழ்ந்த மணிமண்டபத்தில் வைத்து இன்றும் பூசை செய்யப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர்கள் அவருக்கு பழையவர் என்று பெயரிட்டு வழிபட்டு வருகின்றார்கள். உள் வீதியில் வடபுறத்திலே ஓர் நறுநீர்க் கேணி ஒன்றுளது. இதிலே குழந்தைவேற் பெருமான் அருட்குறிப்புடன் வந்து முழுகி அன்புடனே அத்தெளி புனலை யுண்டவர்கள் உடற்பிணி நீங்கி நலம் பெறுகின்றார்கள். இஃது இன்றும் நிகழ்கின்றது.

இதுவேயுமன்றி வடக்கு வீதியில் இரண்டு வன்னி மரங்கள் காலங் கணிக்க முடியாத பழமையாடு கூடி விளங்குகின்றன. திருக்கோயில் உள்வீதித் தென்புறத்தில் காஞ்சிமாவென்று கூறப்படும் ஓர் மரம் நின்று இப்பொழுது பட்டுப் போயிருக்கின்றது. அதனடிமரம் இன்னும் அங்கே நிற்கின்றது. அடியவர்களதனடியிற் கற்பூரங் கொளுத்தி வழிபட்டு வருகின்றார்கள். மக்களில்லாது வருந்தி வரங்கிடந்தோர் அதன் பழத்தையுண்டு மைந்தரைப் பெற்றனர் என்று பெரியோர் கூறுவர்.

சில காலங்களுக்கு முன்னே கட்பார்வை மறைந்த செந்தமிழ்ப் புலவர் ஒருவர் இங்கே வந்து தவமிருந்து பாமாலை பாடி வழிபட்டுக் கட்பார்வை பெற்றார். அஃது அப்புலவர் பாடிய "நான்மணிமாலை" யில் கூறப்படுகின்றது.

முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் செந்தமிழ் முருகப் பெருமானது வற்றாத பேரருளைப் பெறுமாறு அவரது திருவடிகளில் இப்பாமாலையை யானுஞ் சூட்டி வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுயிர் தம்மைத் தன்னிடமிழுக்கும் தன்னிகரழகும் துன்னிய விளமையும் பேரருட் குணனும் சீரிய நாற்றமும் இனிமையு மாதி யியல்பல பயிறலின் முருகனென் றொரு பெயர் வளமுறப் பெற்ற பன்னிரு தடந்தோள் மூர்த்தியின் நறுமலர்ப் பாதங்களைச் சிந்தையால் நாவால் சென்னியால் வணங்கு மன்பர்களின் இடர் களைந்து அவர்களுக்கும் நல்லருள் பாலிக்கவேண்டுமென அவர் திருவடிகளை வணங்குகின்றேன்.

ஆருயிர்கட் குயிராகி யெங்குமாகி யறிவாகி
யானந்த நிறைவாய் நிற்கும்
ஓருருவப் பரஞ்சுடரே! வுள்ளவுள்ள வுவட்டாது
தித்தித் துள்ளூறுந்தேனே!
காருருவக் கொடுஞ் சூரைக் கடிந்தவைவேற்
கற்பகமே! கந்தவனக் கடவைவாழும்
ஆரமுதே! மயில்வீரா! வள்ளி தெய்வயானை மகிழ
குரபரனே! யருள்செய்வாயே.

"பொய்யற்ற கீரன்முதலாம் புலவோர் புகழ்ந்த
வையற்கெனது சிறுசொல்லு மொட்பாகு மிப்பார்
செய்யுற்றவன் மாலுமைபூசை கொடேவ தேவன்
வையத்தவர் செய்வழிபாடு மகிழுமன்றே"

திருச்சிற்றம்பலம்

நவாலி வடக்கு,
விபவ ஆண்டு
கன்னித் திங்கள்

க. சோமசுந்தரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணத்துப் பொலிகண்டி கந்தவனநாதர் நான்மணிமாலை

## காப்பு

### பிள்ளையார்

செஞ்சொற் பெரும்புலவர் செப்புந் தொடைசாடாய்
அஞ்சொற்பா நான்கும் அணிமணியாய்-நெஞ்சத்தாற்
கந்தவன நாதன்மேற் கரமர்மணி மாலையெனத்
தந்திமுகத் தெந்தை சரண்.

### நாமகள்

சிந்தைத் தடத்தரும்பிச் செஞ்செவியி லேமலர்ந்து
வந்துமணி நாவின் மணங்கமழும்-முந்துதமிழ்
வண்டா மரைமணியே வைவேற் றிருக்குமரன்
துண்டா மணிமாலை தா.

### குரு

அருவா யறிவா யமர்ந்தநிலை நீங்கிக்
குருவா யுருவாகிக் கூடும்-இருளேகச்
சீரா ரருள்புரிந்த செல்வன் கழனிணைந்தால்
வாராத வெல்லாம் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

### நூல்

### வெண்பா

திருமேவுங் கல்வி சிவஞான முண்டாங்
குருமேவும் விடுங்கை கூடும்-உருமேவுங்
கந்தவனக் கஞ்சமுகக் கந்தமுரு கன்கருணைக்
கந்தவனஞ் சிந்தைசெய்தக் கால்.

### கட்டளைக்கலித்துறை

காலால் வலஞ்செய்து கைகூப்பி நெஞ்சங் கசிந்துருக
வேலா கலப மயின்முரு காமெய்ம்மை யன்பரனு
கூலா குளிர்பொழிற் கந்த வனத்துக் குலவுமுமை
பாலா வெனப்பகர் வார்க்கில்லை மேலைப் பழவினையே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பழநிமலை மணங்குழைக்கும் பழனிமலைச்
செழுந்தேனே பரமன நெற்றி
அழனிலவு விழிபயந்த வாறுமுக
மாமணியே யரந்தை போக்குங்
கழிலிரவு பகலொருவா வகைநினையு
மொருவரமுங் கருவி மேக
வளநிலவு பொழிற்கந்த வனநினையு
மொருவரமும் வழங்குவாயே.

### நேரிசை ஆசிரியப்பா

வாய்மையு மின்சொலும் மறிகட லுலகமுஞ்
சேய்மையும் வழங்குநின் சீர்த்தியு மல்லாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

பொய்ம்மையுங் குறளையும் புன்சொலும் புகலாச்
செம்மைசேர் நாவுந் திருமுக மாறும்
பன்னிரு தோளும் பரிபுரத் தாளும்
மின்னுமிழ் வேலும் விழிகளாறிரண்டும்
சுரிகுழற் பிறைநுதற் றுடியிடைப் பிடிநடை
வரிவிழித் துணைமுலை மங்கையர் பங்குமாம்
அருட்டிருக் கோல மல்லான் மருட்டிடும்
மாயை பயந்த வான்பொருள் பாராத்
தூயவாள் விழியுநின் றொண்டின ரேவலும்
உன்னடித் தொழும்பு மல்லான் மின்னிடை
அஞ்சன விழியார்க் காற்றிடா வாக்கையும்
அன்பும் பொறையும் இன்பமும் அருளும்
அடக்கமு மாசை யின்மையு மல்லாற்
கடக்கருங்காமமும் வெகுளியு மயக்கும்
பொறாமையு மென்று முறாதநன் மனமும்
இந்தப் பிறப்பினி லன்றியா னெடுக்கும்
எந்தப் பிறப்பினு மேய்திட வருளிச்
செந்தமிழ்ப் பாவாற் றேவ தேவநின்
சுந்தரச் சேவடி துதித்திடும் வரமும்
தந்தருள தண்டலை வளஞ்சேர்
கந்தவனத்துக் கருணைநா யகனே.

### வெண்பா

நாற்றமும் பூவுமென நண்ணுநிலை யெம்பெருமான்
ஆற்றவும் நாயேன் அறிகிலேன்-தேற்றுமொழி
கூறவா கந்தவனக் கொற்றவா வெந்துயரம்
ஆறவா ஆறுமுக வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை
## கட்டளைக் கலித்துறை

வாசக் கடம்பனை மன்றாடி மைந்தனை வல்வினையேன்
ஆசைக் கருங்கடல் தீய்க்கும்வை வேலனை யண்டர்தொழும்
மாசற்ற சோதியைக் கந்த வனத்து மறைக்கொழுந்தை
ஈசற் கொருமொழி பேசுங் குரவனை யேத்துமினே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

மின்னற் கொடிபோன், நுடங்குமிடை
வெற்புக் கரையன் திருப்பாவை
கன்னித் தமிழ்போற் கனிமொழிக்கோ
கசிந்துள் ளுருகு மன்பினுக்கோ
உண்ணக் கொடுத்த தினையிடிக்கோ
செழுந்தே னுக்கோ வொருமுனியாய்
அன்னத் தடஞ்சேர் கந்தவனத்
தையா வுருக்கொண் டணைந்ததுவே.

### நேரிசையாசிரியப்பா

அணைந்தவர் மலப்பிணி யகற்றி யின்னருட்
குணந்தரு ஞானக் குரைகட லமுதே
கங்கையுங் கொன்றையுங் கதிரிளம் பிறையுந்
தங்கிய பவளத் தனிப்பெரும் பொருப்பின்
உச்சியின் முளைத்த பச்சிளங் கொழுந்தே!
உலகமாய் வேறாய் உடனுமாய் நின்றே
அலகிலா வாடல் ஆடுமற் புதனே!
விரிவுஞ் சுருக்கமும் மேலொடு கீழும்
ஒருவரு முணராப் பொருவரு சுடரே!
முருகெனும் பெயர்கொண் டுலகுய வெழுந்த
அறுமுக மணியே! ஆருயிர்த் துணையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

பன்னிரு தடந்தோட் புண்ணிய முதல்வ!
வானோர் வணங்குஞ் சேனை நாயக!
கங்கை மைந்த கார்த்திகை சிறுவ!
செங்கயல் நெடுங்கட் சேயிழை செல்வ!
குஞ்சரி மணாள! குறமகள் கொழுந!
அஞ்சன வண்ணத் தரிதிரு மருக!
அருமறைப் பொருளு மமதுறழ் தமிழும்
குறுமுனிக் குரைத்த மறுவறு குரவ!
தென்பரங் குன்றமுஞ் சீரலை வாயும்
இன்பருள் பழனியு மேரகப் பதியுங்
குன்றமுஞ் சோலையு நன்றமர் வதுபோற்
கோந்தவிழ் நறுமலர்க் குளிர்பொழி லுடுத்த
கந்த வனத்துங் கலந்துவீற் றிருக்கும்
எந்தையெம் பெருமா னேழையே னுரைக்கும்
பணிமொழி யுளங்கொண் டருண்மதி பெரிதும்
விட்புலத் தமரரும் விழைவுறு முன்றன்
அற்புதத் திருநா ளணிதேர் விழாவினில்
அழுது மரற்றியும் ஆடியும் பாடியும்
தொழுதும் வணங்கியுந் துதிபல புரிந்தும்
உழுவ லன்பொடு விழிநீர் பெருக்கியும்
பழுதறு மெய்ப்பணி பலபல வாற்றியும்
ஏர்கிடந் தோங்கிய தேர்வடந் தாங்கியும்
காவடி யெடுத்தும் பாவடி தொடுத்தும்
கண்பெறு பேறுங் காணுபு கருதி
எண்பெற வீண்டிய பண்புடை யடியவர்
பெயர்நிரை தீட்டும் வரிநெடும் புத்தகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

தியலொன் றின்றி யயலொன்றி நின்ற
சிறியனேன் பெரையும் வரைகுதல் வேண்டும்
அன்னவர்க் கருள்வழங் கமையத்
தென்னுடைப் பங்கும் யான்பெறு மாறே.

### வெண்பா

மாறுபடு சூரனுக்கும் மாமலர்த்தாள் தாங்குமருட்
பேறளித்தா வெண்பர் பெரியோர்கள்-கூறுங்
கடியலர்பூஞ் சோலைதிகழ் கந்தவனத் தையன்
அடியவர்க்கீ யானோ வருள்.

### கட்டளைக் கலித்துறை

அருமா தவனய னிந்திரன் போற்றி யடிபணியும்
பெருமா தவளமெய்ந் நீறணி மேனிப் பிரான்றனக்கும்
ஒருமா தவனுக்கு மோதிய நுண்பொரு ளென்செவிக்கும்
வருமா தவமலி கந்த வனத்து மறைமுதலே.

### பதினாறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

மந்து பொழிலில டைந்து வரிவளை
முன்கை முகமதி தங்கு துடியிடை
மொய்ம்பு முதிர்புய னெங்கள் முருகனை
முன்பு விதிவழி கண்டு மயலொடு
வந்து மனைபுகு மருத வளவினில்
வஞ்சமதனனு மைஞ்சு கணைதொட
மஞ்ச மணைகிலள் கண்க டுயில் கிலள்
வண்டல் புனைகிலள் என்று மனமகிழ்
பந்து கழலொடு முண்டி சிறுநகை
பண்டு பயில்வன வின்று பகையுற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவனநாதர் நான்மணிமாலை

பைங்க ணறலுற வன்றில் கடலொடு
பண்பில் பலமொழி யன்றி யிடையிடை
கந்தவன முறை யெந்தை வரவர
கங்கை சுதவர மங்கை யுமையருள்
கம்ப கடகரி தம்பி வரவர
கந்த வரவென நின்று கதறுமே.

## நேரிசை ஆசிரியப்பா

கதறிடு நெளிதிரைக் கருங்கடன் முகட்டினில்
புதையிருள் குடித்தெழு துதைகதிர்ப் பகல்போல்
மரகத மணிநிற மயின்மிசை விரவுயிர்
அகவிரு ளழிவுற வருளொளி பொடுவரும்
ஆறுமா முகவ! ஈறிலாப் பகவ!
வடிநெடு வேல! துடியிடை பால!
ஆறிரு தோள! பேறருள் தாள!
பன்னிரு கண்ண! என்னிரு கண்ண!
செந்தொடைக் குரவ! பைந்தமிழ்க் குரவ!
ஐங்கரன் றம்பி! யாளுடை நம்பி!
சங்கரி மருக! நுங்குல முருக!
அரகர முருக! சிவசிவ முருகவென்
றுன்புகழ் வழுத்தி முன்புகை கட்டி
வாய்புதைத் தடியேன் சேய்மைநின் றிரப்பன்
ஒலிகடற் புடவி உயிர்த்தொகைக் கருளும்
கலியுக வரதனும் நீயே யாதலின்
மன்னுயிர் வேண்டிய வழங்குவை யாயினும்
துன்னிய விருண்மலத் தொடக்கினா லயர்த்துப்
பிணிநீக் கென்றும் மிடிபோக் கென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியாக் கென்றும் பகைதாக் கென்றும்
பன்னிரு செவியினும் படப்பட வரற்றினும்
நின்னுள மியாவது மிரங்கா துன்னடி
எழுமையும் மறவா உழுவ லன்பினை
ஈயென விரக்குமுன் னீன்றசேய்க் கிரங்குந்
தாயினும் விரைந்து தருகுதல் வேண்டும்
மீயுயர் விசும்பு தாயபூம் பொழிலிடை
வன்னிபச் சிலையும் மௌவல்வெண் மலரும்
தென்னை மஞ்சனமும் தேமா வருக்கை
கன்னி வாழைகள் கனிகளு முதவ
மன்னிய கந்த வனத்துவீற் றிருக்குஞ்
சேவலங் கொடியுடைச் செல்வ
தேவரு மடையாச் சிறப்பெய் துதற்கே.

### வெண்பா

தன்னை யறியு மறிவருளிச் சஞ்சலந்தீர்த்
தென்னைப் பிறப்பறுக்க வெண்ணுமோ-சென்ம
வினத்துறையுட் கூட்டுமோ யாரறிவார் கந்த
வனத்துறையு மெம்மான் மனம்.

### கட்டளைக் கலித்துறை

மனமொன்று கந்த வனத்தரு கேமணி மண்டபத்திற்
புனமொன்று மானும்பிடியும் புணர்போ தகத்தினைக்கண்
டனமொன்று முண்கிலள் கண்படை கொள்கில ளஞ்சுகமே
வனமொன்று நீபமலர் மாலை வாங்கி வருகுதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

### பதின்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திங்களொடு கங்கையணி சங்கரனு ளங்கொள்வடி வேலா
செங்கய னெடுங்கணுமை மங்கைமடி தங்குசிறு பாலா
தங்கமலை யங்குகதை முன்புவரை தும்பிதுணை வோனே
சங்குதரி செங்கணரி தண்கமலை நெஞ்சிலினி தேனே
சிங்கமுக ணங்கயமு கன்சுரனை வென்றதிறல் வீரா
செந்தமிழ் கடம்புகுலை வெண்குரவ ணிந்தமணி மார்பா
வங்கமலி யுங்கடலி ரங்குதறை கந்தவன வேளே
வஞ்சமல மஞ்சுமற வஞ்சலென வந்துதவு தாளே.

### நேரிசை ஆசிரியப்பா

தாவிலா மூவகை மாயையை யியக்கி
அருளொடு பொருந்திநின் றாருயிர்த் தொகுதி
அறிவற மூடிய விருண்மல வலிமையை
நால்வகை வாக்கினு மைவகைத் தேவினும்
கலைமுதன் மூன்றினும் வரன்முறை யடக்கி
அறிவுத் தொழிலும் நசையும் வெளிவரக்
குணமொரு மூன்று மமைவரக் கூட்டி
மனமுதற் கரணம் புணர்த்தி யினமுறும்
ஐம்பெரும் பூதத் தைம்புல வாயிலும்
வினைபுரி யுறுப்பு மமைத்துப் பழவினை
இன்பமுந் துன்பமு மிரண்டுந் நுகர்தர
வானினும் நரகினும் மண்ணினும் விடுத்துழித்
தக்க நல்வினை சார்ந்தொரு வாற்றால்
பக்குவ மடைதலும் பார்த்து மெய்ப்படும்
அருளுருக் கொண்டு திருவடி சூட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமுறை காட்டிப் பேரின் பருளும்
ஒருதனித் தலைவ! குறமக ணாயக!
இழந்த வறிவினைக் கருவியா லெழுப்பி
வளம்பெற வழங்குநின் மாணருள் தேறா
திருள்வலி யாலே முழுவதும் மறந்து
யானென தென்னுஞ் செருக்குற் றெழுந்து
மேல்வினை பெருக்கி வீழுமவ் வுயிர்க்கும்
காலமு நியதியுங் கடவாப் பால்வினைக்
கெய்துவ வளந்து கைவரக் கூட்டி
மையுறு பிறவியில் வைத்தருள் வள்ளால்!
வேண்டலும் வெறுத்தலு மில்லை யாயினும்
மாண்டகு விதிமுறை வாரா மாக்களை
நெடுநில வரைப்பினிற் றந்தை தாயர்
கொடுவினை புரிந்துங் கொண்டுகூட் டுதல்போல்
நடுநிலை யடக்கிக் கறுவுகொ ணெஞ்சமொடு
மறத்தொழில் புரிந்துந் திருத்திடு மண்ணால்: அதா அன்று
அன்னைநீ யென்று மப்பனீ யென்றும்
மன்னிய காதன் மனைவிநீ யென்றும்
மைந்தனீ யென்றும் மகிழ்நநீ யென்றும்
முந்தைநீ யென்றும் முறைபல கூறி
வாடா நெகிழ்வொடு வழிபடு மவர்க்கும்
கூடா நல்லருள் கூட்டுமெம் பெருமான்!
மண்ணினு நீரினும் வளியினுந் தீயினும்
விண்ணினுஞ் செஞ்சுடர் வெண்மதி யிரண்டினும்
உயிரினு மொன்றினு முள்ளக் கருத்தினுங்
கண்ணினுங் காணா நுண்ணுணர் வானோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

பெருமை சிறுமை முதுமை புதுமை
அணிமை சேய்மைக் கிருவரம் பாகி
ஒளிவற நிறைந்த வொப்பிலா மணியே!
உன்னரு ளின்றி யுன்னிலை யறிதல்
மன்னுயிர்க் கென்றும் மாட்டா மையினாற்
கடிபொழி லுடுத்த கந்த வனத்தில்
அடியவர் மொண்டுணு மருட்பெருங் கடலில்
ஒருதுளி யாயினு முதவுதல் வேண்டும்
அறிவரு நின்சீ ரறிந்து
பிறிவரு மின்பம் பெற்றுவாழ் வதற்கே.

### வெண்பா

வாழ்வுதரு முன்னை மறந்து மலச்சார்பால்
தாழ்வுதரு வெம்பிறவி சாருவேன்-நாளும்
அலமருவேன் கந்தவனத் தையாமெய் யான
நலமருவ வென்றுவரும் நாள்.

### கட்டளைக் கலித்துறை

நாளொன்றொன் றாக நடந்தன கந்தவ னத்துக்கந்த
வேளின்றும் வந்திலர் மெய்பசப்பூர விழிமலரும்
வேளொன்றொன் றாக மலர்வாளி தூவும் விரைந்துபுகுந்
தாளென் றுரைப்பதற் காளில்லை யென்செய்வ னாயிழையே

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆதி யும்நடு வும்முடி வும்மிலா
ஆறு மாமுக னார்விளை யாடிடும்
வீதி தங்கிய கந்தவ னத்திலே
மேவி யன்பொடு நெஞ்சக நெக்குகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

போது செங்கையி னீரொடு தூவியே
போற்றி வேன்முரு காபுக னீயென
ஓது மன்பினர் நோய்மிடி பேய்பகை
ஓடு மின்புற வாழுவ ருழியே.

### நேரிசை ஆசிரியப்பா

ஊழியு முலவாப் பாழியந் தடந்தோ
ளாழியஞ் செங்கை யரவணைச் செல்வனுந்
தாளுயர் முட்புறத் தாதார் தாமரை
நாண்மலர் வாழ்க்கை நான்முகத் தொருவனும்
ஏழுயர் நாற்கோட் டிரும்பணைப் புழைக்கைச்
சூழிமால் யானை யாளிமொய்ம் பினனும்
உம்பரு மிம்பரும் வாழ முன்பொர்நாள்
வானுறு சிமைய மணிவரைச் சாரற்
தேனுறு தாமரைத் தெய்வத வாவியில்
அழகிய திருவுருவாறு கொண் டருளிப்
பழகிய வறுவர் பாலமு தருந்தி
அடிதொழு மப்பனு மம்மையு மணைக்க
வடிவமொன் றாகி மன்னிய முருக!
நங்கையொண் சிலம்பி னன்மணி பயந்த
மங்கையர் நீடு வயிறுவாய்த் தளித்த
ஒன்பது வீரர்க் கொருதனி முதல்வ!
கருவிளை யாடல் கடிந்துயிர்க் கருளும்
அருள் விளையாடல் அளப்பில புரிந்தோய்!
எண்ணா தெதிர்த்த கண்ணா யிரவன்
ஆரயிர் வீட்டி யளித்தரு ளண்ணால்!
பொருதிறல் வீர வாகுவும் பூதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகுறத் தேவர்க் ளடிதொழப் போந்து
கைம்மலை முகத்துக் கயவனை யவனுறை
மைம்மலை யுடனடு வடிநெடு வேல!
நந்தூர ரலைவாய்ச் செந்தூர் நண்ணிச்
சூருள மறிய வீரனை விடுத்தோய்
மற்றவன் நீதி வழிவரா திகலச்
சுற்றமோ டழித்த வெற்றிவேற் பெருமான்!
கூறுறுமுரு மயில் கோழியாய்க் குறுகலும்
ஏறியு முயர்த்தியு மாண்டரு ளெந்தாய்!
விண்குடி கொண்ட மேக வாகனன்
கண்குடி கொண்ட கதிர்மதிச் சுடர்நுதற்
குஞ்சரக் கொடியை நீருடன் கொடுப்ப
நெஞ்சுவந் தேற்றும் வஞ்சமில் சிவமுனி
திருநோக் கெய்தக் கருநோக் கெய்தி
யொருமா னீன்ற சிறுமா ணோக்கியைக்
காவினிற் கலந்து விரகினிற் கவர்ந்தும்
உலகியல் காட்டிய பொருளறி புலவ!
போகமும் வீடும் போற்றுநர்க் கருளுந்
தோகை பாகனு நீயே யென்பது
வெஞ்சிறை யிருந்து நெஞ்சழிந் தழுத
இந்திரன் சேய்க்கருள் தந்திடு மதனால்
இந்திரன் சேய்க்கருள் தந்திடு மதனால்
நன்கனந் தெளிந்துன் கிண்கிணி கவைஇய
ஒண்செஞ் சீறடி உச்சிமேற் கொண்டு
செந்தமிழ்க் கடலும் உவர்நீர்ப் புணரியும்
விந்தமு மடக்கிய சந்தனப் பொதியக்
குறுமுனிக் கருளிய மறுவறு மந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைச் செவியினு மீகவென் றிரப்பன்
மன்னிய விருவினை மறிதிரைப் புணரியும்
கலங்கா விருண்மல விலங்கலு மடக்கிச்
செந்தமிழ்ப் பாவா லுந்தன் பெரும்புகழ்
எந்த நாளு மிசைத்திடக்
கந்த வனத்துக் கடவுட் கற்பகமே.

### வெண்பா

கற்பகமு மாவு மிருநிதியுங் கைக்களிறும்
முற்பகரு மாயனயன் மூதுலகும் - அப்பால்
வருமுலகும் வீட்டின்புங் கந்தவனம் வாழும்
ஒருமுருகா வென்பார்க் குள.

### கட்டளைக் கலித்துறை

உள்ள முருக வுரைதடு மாற வொளிவிழிநீர்
வெள்ளம் பெருக விருகரங் கூப்பியுன் மென்மலர்த்தாள்
தெள்ளுஞ் சுவைத்தமி ழூற்றுதிக் கின்றநற் செல்வமருள்
வள்ளி மகிழ்முரு காகந்த மாவன மாணிக்கமே.

### பதின்முச்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மாம லர்க்கு ருந்தி னீழ லாம னத்தொ ழும்பர் சூழ
மாலை மன்ன னுக்குயர்ந்த பரிமாவை
ஏழு றத்தெரிந்து மாறு பாறுத்தி யைந்து போது
ஞான பண்டி தர்க்கி தஞ்செ யுபதேசம்
தோம றப்பு ரிந்து மூல வாக மப்ப யன்கள் கூறு
தூம திக்கொ ழுந்து மேவு சடையாருக்
கோமு ரைத்து கந்த கந்த மாவ னத்த மர்ந்த கந்த
னோரி ணைப்ப தங்க ளெங்க டுணையாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவனநாதர் நான்மணிமாலை

## நேரிசை ஆசிரியப்பா

துணையென நம்பித் தொழுமவர் மயறுடைத்
திணையறு பேரின் பீந்தருள் தாளும்
வினையெனு மழியா விலங்கலை நூறி
அனையவர்க் காக்கு மாறிரு தோளும்
உடனுறை கருமல வொலிதிரை சுவறிட
விடுசுட ருமிழ்வடி நுதிநெடு வேலும்
இடருறு பொழுதினி லெதிர்கொள மிசைவரு
திடமுறு நடனச் சித்திர மயூரமும்
ஏவருந் துதிக்க விருமூன்று தொழில்புரி
மூவிரு முகமு மாறிரு நோக்கமும்
விழைவே தொழிலெனு மேதரு மருட்குணந்
தழையே ரிழையணி தையலார் மருங்குமாய்
விண்ணுயர் தேவரும் விரும்பவந் தேத்தும்
மண்ணுயர் கந்த வனத்துவீற் றிருக்கும்
அருட்பெருங் கடலே! குணப்பெருங் குன்றே!
இருட்கொரு விளக்கே! தெருட்பெருக் காறே!
செந்தினைப் பைங்கூழ் செறிபுனக் குறிஞ்சி
வெந்தொழிற் குறவர் தந்தபொற் கொடியைக்
களவினிற் கூடிக் கற்பினிற் கைக்கொளு
மளவினிற் புளினர்க் கரசனங் களித்த
கந்தமு மிடியுங் கனிகளுங் காயும்
எந்தைநீ கைதொட் டேன்றிடு மளவில்
இருபள் ளரசருங் கருமுகி லூர்தியும்
வரமருள் முனிவரு மிரைதிரை யுலகினில்
நிற்ப வியங்குவ வாமிரு திறத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

பொற்புறு முயிர்களும் பொலிந்தின் புறதலின்
உலகெலா முன்றிரு மேனி யென்பதும்
உயிரெலா மங்கங் குறுப்புக ளென்பதும்
நன்கன நாட்டினை நாமுமவ் வுறுப்பின்
ஒன்றாய் மவருத லொருதலை யாதலின்
மண்ணக நடுங்கினும் வானகந் துளங்கினும்
விண்ணுறு கோள்க டந்நிலை மாறினும்
செஞ்சுடர்ப் பரிதி குடக்கே யுதிக்கினும்
அஞ்சுவ தியாவது மில்லை
அஞ்ச வருவது மடியெமுக் கிலையே.

### வெண்பா

இலையென் றிரங்கி யிரக்கப் புகுந்து
நிலையொன்றி நீவருந்த வேண்டாம்-அலையொன்றி
மன்னுதுறைக் கந்த வனத்தருகே யாறுமுகப்
பொன்மலையொன் றுண்டங்குப் போ.

### கட்டளைக் கலித்துறை

போதேய் நறுந்தொடை வாடு மடிமலர் பூமிதொடும்
காதேய் வரிநெடுங் கண்ணிமை யாநிற்குங் காமர்நுதன்
மீதே தாள வடந்தூங்குங் கந்த வனத்துநின்ற
மாதே யிவளணங் கல்லணெஞ் சேநீ வருந்தலையே.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தந்தாவள நின்றானுயர் தண்டாமரை கொண்டான்
சங்கார்கர னென்போர்நுதி தாளாதடந் தோளா
கந்தாநதி மைந்தாநுதி கந்தாகதி தந்தாள்
காரார்மணில் வீராவய லூராவதி சூரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவனநாதர் நான்மணிமாலை

சந்தார்தமிழ் தந்தாய்மகிழ் தாராய்வினை தீராய்
தாதாகுண நீதாசிவ போதாவருள் தாதா
செந்தூர்நிகர் கொந்தார்பொழில் கந்தாவன நந்துஞ்
சேயேகுரு வாயேமல நோயேசிதைப் பாயே.

## நிலைமண்டில ஆசிரியப்பா

பாவல ராகப் பரிவுநா ராக
நாவலர் தொடுத்த நறுந்தமிழ் மாலையும்
கார்பெயக் கலித்த கடிகமழ் கடம்பின்
தூமலர்த் தொடையலு மாரமுந் துயல்வருங்
குங்குமத் தடந்தோட் குமர நாயக!
செங்கரத் தெடுத்த சினவடி வேல!
பந்தவனங் கெடப் பார்க்குமர றிருவிழிக்
கந்தவ னத்துக் கடவுண்மா மணியே!
மாயா யாக்கை வலிகெழு திணிதோட்
காயா மேனிக் கருந்தொழிற் சூரன்
மந்திரம் புகந்துழி மாமணி குயிற்றிய
சுந்தரப் பசும்பொற் சுடர்த்தவி சருளியும்
குருகுப் பெயர்பெறு குன்றுடைக் கொடியனும்
விரிசுடர்ப் பிணித்த எறுழ்வலிக் குமரனும்
ஆழ்பிலப் பகுவாய்க் கோளரி முகத்தனும்
ஊழியு முலவாத் தோள்வலிச் சூரனும்
தனித்தனி யாத்த கணிப்பெரும் மாயப்
பிணிப்பினை வீட்டியணைத்தெடுத் தருளியும்
வாகுவைக் காத்த வாய்மைகண் டுனது
சேகுயர் சேவடி சென்னிகொண் டிரப்பன்
இருண்மலச் சூரனு மொருவரு மாயைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

கடகரி முகவனு மிருவினை யுரவெனு
மொருகோ ளரியு மவர்வழி முறைவரு
காமன் கோபன் ஆமிவர் கிளைஞரும்
செய்திடுஞ் சிறுமைத் திருக்கறுத் தெனையும்
ஐயநீ யெடுத்தணைத் தாட்கொளும் வரமே.

### வெண்பா

வரமுருகா கந்த வனமுருகா வாறு
சிரமுருகா செவ்வேண் முருகா-பெருகுதமிழ்
நான்முருகா வென்னவினை நூறுமே பேரின்பம்
வேன்முருகா வென்ன மிகும்.

### கட்டளைக் கலித்துறை

மின்னுங் கதிர்வடி வேலுண்டு வெற்றி மயூரமுண்டு
முன்னுந் திருமுக மாறுண்டு முண்டகத் தாளுமுண்டு
முன்னு மருளுமுண்டு கும்பிடக்கந்த வனமுமுண்டால்
இன்னும் பயமுனக் குண்டோ மறலி யெதிர்கினுமே.

### பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

எங்கும் நிறைந்த கதிர்மவுலி
இறைவன் தோண்மே விருந்திறக்கி
இந்தா கொள்கென் றுமையம்மை
யிடத்து நீட்ட விமையவல்லி
செங்கை செலுத்தி யழகொழுகு
திருவே வருக! சிவஞானத்
தேனே வருக! சுவையமிழ்தின்
தெளிவே வருக! தேவர்முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குஞ் சிலம்பு புலம்புமலர்த்
        தாளா வருக வருகவெனச்
சாற்றிய ணைத்து முத்தமிடுந்
        தமிழ்மென் குதலைச் சிறுமதலாய்
வங்கம் மலிந்த துறைக்கந்த
        வனத்து முளைத்த வாறுமுக
மணியே யுள்ளத் திருள்கெடுக்க
        வருக வருக வருகவே.

## நேரிசை ஆசிரியப்பா

வரவும் போக்கும் விழைவும் வெறுப்பும்
பொருவு முயர்வு மொருவி யறிவாகி
யாங்கணும் நிறைந்த வோங்கொளிப் பிழம்பே!
தெருளுரு சிறப்பி னருளுருக் கொண்டு
மருளுரு முலகின் மன்னுயிர் வாழக்
கந்த வனத்துக் கலந்துவீற் றிருக்கும்
எந்தையெம் பெருமா னென்னுயிர்க் குயிரே!
காற்றூண் நிறுத்திக் கைமரம் நாற்றி
வளைமுது கோட்டிப் பழுக்கழி நிரைத்து
சிரைக்கையி றார்த்துத் தசைப்புலால் வேய்ந்து
தோலான் மறைத்த மாலா ருடலெனும்
இருவினை தந்த வொருதனிக் குடிலில்
செம்புலஞ் செல்லா வைம்புலக் கள்வரும்
ஆசை என்னும் பாசப் பசாசமும்
நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின வுரகமும்
வெப்பே குளிரே யையென வுரைக்கும்
முப்பிணிக் கொலைஞருந் தப்புறு மனமெனுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்புறு குரங்கும் மெய்ப்பகை விளைக்கும்
இடிபுரை யுரையெனு மொருகடி நாயும்
பொய்முத லழுக்கிற் புழுத்தே யொய்யென
வாயினும் வாலினும் ஓய்வறத் தீண்டும்
பொல்லாக் கடுவிடப் பூச்சியு மெல்லாம்
தீங்கினை யிழைக்க வாங்கவை தம்முடன்
இருண்மல மதனால் அறிவொளி யிழந்த
ஏழை நாயேன் யாங்ஙனம் வாழ்வேன்
அறிவொளி தந்துன் னருளொளி யேற்றி
மறுவறு மந்திர வலிமையு மருள்வாய்
வெம்பகை தனித்தனி வீட்டி
இன்பமொ டென்று மிருந்து வாழ்ந்திடவே.

## வெண்பா

வேலவா மெய்ஞ்ஞான வெய்யவா வெய்யவினை
மாலவா நீக்குமறு மாமுகவா-சால
மனமுருகா தாவின்னும் வன்மமா கந்த
வனமுருகா தாதாண் மலர்.

## கட்டளைக் கலித்துறை

மயலே புரிந்தெனை வாட்டு மணங்கின் வரிவிழிகள்
கயலே முகமுங் கலைமதி யேகடியார் குழலும்
புயலே முலையும் பொருப்பே விருப்புறு கந்தவனத்
தயலே யுளமொழி லேயவ ளாடு மகலிடமே.

## பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இடங்கொண் டிணைந்து புடைபரவி
இழையு நுழையா தெதிருன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

இறுகி யிளகிக் கண்கறுத்திட்
டெழில்சேர் கலவைச் சாந்தேந்தி
வடங்கொண் டெழுந்து கச்சிறுக்கி
மயங்கு மிடையு நடுங்குமணி
மார்பிற் பாய்ந்து செயும்
வன்ன முலைமான் மறிகவரத்
திடங்கொண் டொருதா ளிருவிரைப்பூஞ்
சினைமென் கொம்பர் வரிப்புலியாய்த்
தினைசேர் படப்பைப் பரணருகே
செழித்து முளைத்த செழுங்சுடரே
மடங்கொன் றறிவை நிறைவித்துன்
மலர்த்தாள் விரிக்கு மருளொளியில்
மகிழ்ந்து தூங்கும் வரமருள்வாய்
கந்த வனத்து வாழ்முதலே

### நேரிசை ஆசிரியப்பா

வாழ்வுற வந்து மலரடி வணங்கிய
வானவர் சேனா பதியா யூனமில்
வச்சிர யாக்கைய னச்சமி லசுரனை
யொன்னல னென்ன வுலகுவே றுணர
அன்னவற் கருடரு மகத்தொடு குறுகி
படுபுட் சிமிழ்க்கு மிறவுளன் போல
அடுசமர் புரியு மாடல் காட்டி
முன்னுற நிற்புழி முழுவலிச் சூரன்
மன்னிய செருக்குறு மனத்தின னாகி
நின்னியல் புணரான் நீடிய மாயையில்
எண்ணிலா வடிவுகொண் டெதிர்த்தன னாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கையில் வாங்கிய திருநெடுஞ் சிலையிற்
புங்கவ மாயிர கோடியிற் போக்கி
ஈயலிற் கிளைத்த மாயமா லுருவம்
ஒன்றொழி யாது பொன்றுவித் துறுபுலம்
வென்றிடு மேலவர் மனம்போ லொருதனி
நின்றவன் றன்னை நீமுகங் கொண்டு
நொடிவரை நில்லா வடிவுகாட் டினையால்
இறுதியும் நடுவும் ஈறுமொன் றில்லா
மறுவறு வடிவம் காட்டுதுங் காணென
வும்பரு மிம்பரு மூலகமும் யாவும்
அடக்கிய தொல்லை யருளுக் கொண்டு
கடக்கருஞ் சூருளங் கனிந்திட நோக்குழி
மெய்வரு முணர்வு கைவரு மவுணன்
ஐயநின் மேனி யழகெலாங் கண்டுகண்
டேரி கூடிய விழுதென வென்பும்
நேரிய நெஞ்சமு நீர்மையி னுருக
ஒன்றல வெண்ணி யொருமையி னிற்றலும்
நல்லுணர் வகற்றிட ஞேரேலென ஞாட்பினுள்
அல்லுரு வாகி யமரரை யடுவான்
செல்லுறழ் செலவிற் சேறுதல் தேரா
உச்சிக் கூப்பிய கையினர் விதிர்விதிர்த்
தச்சத் தாலலை வூக்கையர் நிற்புகழ்ந்
தெண்ணுதற் கரிய விறைவா வோலம்
பண்ணவர்க் கரிய பரனே யோலம்
கண்ணுத லருளிய களிறே யோலம்
மேவல ருட்கு மிடியே யோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

பாவலர்க் கெளிய பரஞ்சுட ரோலம்
மூவருமாகிய முரகா வோல மென்
றிந்திரன் முதலிய விமையவ ரோலிட
அஞ்சலி ரென்றமைத் தருள்புரிந் ததுபோல்
பெருவலி படைத்த வருண்மலச் சூரன்
இருவினை மாயை யுருபல மேவி
அறியா விருளி னகப்படுத் தடர்க்குங்
காலையி னடியே னோலமிட் டழைத்தால்
மஞ்சுறழ் தூவி மயின்மிசைத் தோன்றி
அஞ்சலை வாழியென் றருள்தால் வேண்டும்
வளையொலி மணியொலி வண்டமிழ் மறையொலி
தழைமுர சறையொலி சயசய வொலியொடு
கனைகட லொலி மலி கந்த
வனமுறை யிலைவடி வேற்பெரு மாளே.

## வெண்பா

மாமுதலை வாரியெறி வாரிநடு வாகிவரு
மாமுதலை வாரியெறி வைவேலன்-ஓமுதலைக்
கண்டமட்டி லேகறுப்பற் கோதுகுகன் கந்தவனங்
கண்டமட்டி லேகாண் கதி.

## கட்டளைக் கலித்துறை

கலங்காத தீவினை யைவா யரவின் கடுவிடத்துக்
கலங்காத நெஞ்சமு நின்றிரு மந்திர மன்புடனே
பலங்கா தலியாதுனும் பேறுங் கந்த வனம்பயிலும்
அலங்கார வேன்முருகா வருள்செய்தெனை யாளுதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவனநாதர் நான்மணிமாலை

## அறுசீர்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

தித்திக்குஞ் சுவையமுதச் செழுந்தமிழால்
வைதோர்க்குந் திருவுஞ் சேர்த்து
முத்திக்கு மருள்சுரக்கு முதுபுலவன்
நீயென்பர் முருகா நாயேன்
புத்திக்குத் தெரிந்தவகை புகன்றகவி
புனைந்தருளைப் புரிய வேண்டும்
எத்திக்கும் பரவுகந்த வனத்திருக்கு
மிருக்கறியா வெம்பிரானே.

## நிலைமண்டில ஆசிரியப்பா

என்றுநீ யுண்டன் றியானுமுண் டன்றே
அரிசியுந் தவிடும் போல விரவுறும்
இருண்மலத் தொடர்பு மெந்தனுக் குண்டவ்
விருண்மலத் தொடர்பா விருவினை விழைவுண்
டிருவினை விழைவா லெய்திடும் பிறப்பே
எய்திடும் பிறப்போ எண்ணில் வகைதாம்
முட்டை வெயர்வை கொட்டை கருப்பையென்
றிட்டநால் வகையி னெழுவகை யாமே
இட்டநால் வகையி னெழுவகை விரிவோ
நாற்ப திரட்டி நான்குநூ றாயிரம்
நாற்ப திரட்டி நான்குநூ றாயிரம்
பாற்பட விரிந்த பலபல பிறப்புள்
தேவராய்ப் பிறந்து சிதைந்தநாட் பலவே
புல்லாய் மரமாய்ப் போனநாட் பலவே
புழுவாய்ப் பாம்பாய் வழுவுநாட் பலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாய்ப் பறவையாய் மேயநாட் பலவே
விலங்காய்க் குரங்காய் விட்டநாட் பலவே
மனிதராய்ப் பிறந்து மடிந்தாட் பலவே
மன்னிய மனித வடிவினை யெடுத்துழி
நின்னியல் மறுத்து நின்றநாட் பலவே
நின்னியல் உண்டெனு நினைவுகை கூடியும்
பொய்மதப் படுகுழி புகுந்தநாட் பலவே
பொய்மதப் படுகுழி புகுந்தழுந் தியவழி
ஐயகோ நின்னை வைதநாட் பலவே
பொல்லா வருவினைப் புரிநெகி ழாமையின்
எல்லாப் பிறப்பு மெடுத்தெடுத் திளைப்பேற்
கறிவொடு கூடா தொருவழி யாற்றிய
இறைவினை கந்தாய் நிறையருள் பெருக்கிச்
சைவமுந் தெய்வத் தமிழும் வழங்கும்
இந்நில மருங்கி னிப்பிறப் பீந்தே
செம்பொன் மண்ணொடு சேயிழை மயக்கினில்
எம்பிரான் வீழினுமிடையிடை நினது
செம்புலச் சீறடி சிந்தையிற் கொள்ளும்
நல்லறி வதனையு நாடிவந் தருளினை
நல்லறி வதனால் நாடின னோக்குழி
என்னுடை யியல்பு மிருண்மலத் தன்மையும்
உன்னுடை யுண்மையு மொருசிறி துணர்ந்து
வருவது நிற்பதும் மாய்வது மகன்றே
ஒருதனிப் பெருவாழ் வுன்னடி யடைய
எண்ணுவ னெண்ண மிறையுநின் றிலதால்
பொய்யாம் பொருள்வயிற் போய்ப்போய்ப் புரையுறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் நான்மணிமாலை

எய்யா மனத்தை யிணக்கி நினைக்கினும்
ஐவாய் வேட்கை யவாவடர்க் கும்மே
ஐவாய் வேட்கை யவாவை யடர்க்கினும்
உள்ளுறு காமத் துறகனல் சுடுமே
உள்ளுறு காமத் துறுகன லடங்கினும்
பொள்ளெனக் கோபம் புகுந்திடர் செயுமே
பொள்ளெனக் கோபம் புகுந்திடு மல்வழி
யானென தென்னுஞ் செருக்கெழுந் திடுமே.
யானென தென்னுஞ் செருக்கற யாவதும்
அருளினா லெல்லா மமைவன வாமென
ஒருமையி னிற்க வொட்டா தோரிமை
ஒருமையி னிற்பினு மிருண்மலப் புணர்ப்பால்
இருட்டறைப் புகுந்த குருட்டினன் போல
ஒன்றையுங் காணா துலைதரு கின்றேன்
அந்நிலை நீயுமறிகுவை யறிந்தும்
இன்னமு மருள்செயா திருப்பது முறையோ
அருளினா லுன்னைப் பிறிவற வறியும்
ஒருவழி கூட்டி யருளொளி காட்டிக்
கனமமர் சோலைக் காமரு கந்த
வனமமர் பன்னிரு கையுடை வள்ளால்
அருவடி வாகி யமர்வது நீங்கிக்
குருவடி வாகி யின்னமுங் குறுகித்
திருவடி சூட்டி யருள்தர வேண்டும்
மலமா சகன்ற மன்னுயிர்க் கருளும்
உலவா வின்பத் தொருபெருந் திருவே.

**கந்தவனநாதர் நான்மணிமாலை**

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## முருகன் துணை

# கந்தவனநாதர் பதிகம்

## காப்பு

### பிள்ளையார்

கந்தக் கடம்பணியுங் கந்தவன நாதன்மேல்
சந்தத் தமிழ்ப்பதிகஞ் சாற்றவே-தந்தருளும்
ஐந்துகரத் தொந்திவயிற் றந்திநிறத் திந்துமுடித்
தந்திமுகத் தெந்தைமலர்த் தாள்.

### நாமகள்

சிந்தைக் கொளிகொடுக்குந் தெய்வவிளக் கேமதுரச்
சந்தத் தமிழ்ப்பனுவற் றாழ்குழலே-சுந்தரஞ்சேர்
கந்த வனக்கடவைக் கல்யாண வேன்முருகன்
செந்தமிழ்ப்பா நாவினின்று செப்பு.

### குரு

காக்குங் கருணை விழியுங் கதிர்முகமும்
பூக்கு மினிமைப் புதநகையும்-ஆக்குந்
திருவடியுங் காட்டிவினை தீர்த்தாண்ட ஞானக்
குருவடிவை நெஞ்சே குறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் பதிகம்

### நூல்

மன்னுலகு மறுவின்றி வாழவொளி தருமுகமு
மார்வலர்க் கருளுமுகமும்
மந்திர விதிப்படிநல் லந்தண ரியற்றுமறை
வந்தன முவக்குமுகமும்
இன்னுமுண ராதமெய்ப் பொருளினைப் பக்குவர்க்
கீகின்ற ஞானமுகமும்
இன்னார் தமைக்கடிந் தருள்கின்ற வாண்முகமு
மின்பகை புரியமுகமும்
பன்னிரு தடந்தொளு முன்னுமிரு தாளுமென்
பாவவலை பருகுவேலும்
பாவைநல் லார்களிரு பாலமாய் நல்வரம்
பாலிக்க முன்வருகுவாய்
கன்னல்பூ கந்தழுவ வன்னிமே கந்தழுவு
கந்தவன மதனில்வாழும்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

மந்தா கினிக்கினிய மைந்தா பொருப்பில்வளர்
வண்டார் மலர்க்குழலிசேர்
மஞ்சார் புயத்தமணி மன்றாடு நித்தரருள்
மந்தார கற்பதருவே
இந்தார் நுதற்கவுரி சந்தார் தனத்தமுது
ணின்பா ரெழிற்குழவியே
இந்த்ராதி யர்க்கருள்செய் நந்தா விளக்கனைய
வெந்தா யுயிர்க்குளுயிரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் பதிகம்

சந்தார் தனிப்பொதியி லைந்தாள் தவத்துமுனி
தன்கா துறப்பெருமொழி
தந்தான் தமிழ்க்குரவ செந்தூர் திருத்தணிகை
தண்டா மலைப்பதியுறை
கந்தா மனத்துமிக நொந்தே னெனக்குமருள்
கந்தவன மதனில்வாழுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

அழுக்கா றவாவெகுளி நீங்கவும் மெய்யன்பொ
டருள்பொறை தழைத்தோங்கவும்
ஆகாத பொய்குறளை பேசாது விடவுநல்
லன்புடைய மொழிபேசவும்
இழுக்கான தீயநெறி கைவிடவு நல்லவர்
இணக்கமெஞ் ஞான்றுமுறவும்
யானென தெனுஞ்செருக் கறவுநின் னன்பருக்
கேவல்பணி வோடுசெயவும்
வழுக்காத செந்தமிழ்ப் பாடலா லுன்பெருமை
வல்லவா சொல்லிவரவும்
வாள்விழி சிறந்துனைக் கண்டுமகிழ் வாகவும்
வரமருளி யெனையாளுவாய்
கழிக்கானல் நறவா ரளிக்கான மோவாத
கந்தவன மதனில்வாழுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

வற்றாத கருணைப் பெருங்கடலி லன்பெனும்
மத்திட்டுணர்சிகயிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் பதிகம்

மாறாது கடையவந் திடுஞான வமுதமே
மற்றதனி லுற்றபயனே
பற்றாத வர்க்குமருள் நீதியே யாதியே
பவவிருட் கொருசோதியே
பார்க்கத் தெவிட்டாத வழகொழுகு தெய்வமே
பாவலர்கள் சேமநிதியே
அற்றார்க் களித்திடும் பேரின்ப வாரியே
ஆறுமுக ஞானமலையே
ஐயனே யீராறு கையனே மெய்யர்நெஞ்
சகலாத மணிவிளக்கே
கற்றார் விழுங்கிடுங் கனியே யடைக்கலங்
கண்ணருள்செய் கந்தவனம்வாழ்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

வாக்குக்கு மனதுக்கு மெட்டாத வருள்ஞான
வாரியே வாரியுண்ணும்
மதுரித்த பேரின்ப குறவமே யெப்பிணியு
மாற்றிடுஞ் சஞ்சீவியே
நோக்கிற்கு நுண்மைகூ ருணர்விற்கு மறிவரிய
நுட்பமே நுணகொட்பமே
நோன்புற்ற பெரியவர்கள் தாம்பற்று தாணுவே
நூல்பல வுணர்ந்த புலவா
ஆக்கைப் பெருங்கூட்டி லாணவக் கட்டினை
யறுக்கவறி வருளுமரசே
ஆருயிர்த் துணையே பெரும்பிழை பொறுத்தாளும்
ஐயனே யுனைநம்பினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் பதிகம்

காக்கப் பெருங்கடனுக்கே மனக்கினிய
கந்தவன மதனில் வாழுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

எண்பெற்ற விந்திரனு மலரயனு நெடுமாலு
மிடருற்ற தேவர்குழுவும்
ஏங்கித் தவித்துத் துடித்துப் பதைத்துன்ற
னிணையடிகள் முடிகள்சூடித்
திண்பெற்ற சூரனாற் றுன்புற்ற வாறெலாஞ்
செப்பியழு தழுதுவேண்டச்
சீர்பெற்ற வாய்மலர்ந் தஞ்சலென் றருளியத்
தெவ்வர் தமை முழுதுமட்டே
மண்பெற்று வானவர்கள் வாழ்வுபெற் றிடமேக
வாகனன் பெற்றதெய்வ
வாரணத் தைக்குறவர் மாதொடுல குயிர்வாழ
மாமணம் பெற்றகுமரா
கண்பெற் றிடக்கூறு புலவர்மணி மாலைபெறு
கந்தவன மதனில்வாழும்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.
அன்னையோ வீராழி நெற்கொண்டு முப்பத்தி
ரண்டறம் வளர்த்தசெல்வி
அப்பனோ பிச்சைபுக் குண்டிடினு முயிர்களுக்
கருள்செயுங் கருணைவள்ளல்
தன்னிகரில் தமையனோ குட்டுக் குவந்தடியர்
தழையவிடர் களையுமுதல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் பதிகம்

தாய்மாம னேமன்னை புண்டுமுயி ரின்னல்தவிர்
தனியாழி தரியாழியான்
மன்னுமவர் குலமுதல்வ னீயெம்பி ரானேனை
மன்னுயிர்க் கருள்சுரந்தென்
மட்டிலோ மனமாறு படுமாறு நீதியோ
மாறாத பழியாகுமே
கன்னன்மொழி வள்ளியுயர் பொன்னினகர் வல்லிபுணர்
கந்தவன மதனில்வாழுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே

முன்னஞ் சினந்துவந் தமர்செய்த சூரற்கு
முடிவில்பத முதவவில்லையோ
முத்தமிழ்க் கீரனுக் கருளவில்லை யோதேவர்
முட்டினை முடிக்கவில்லையோ
வன்னெஞ்ச ரிட்டமா யத்தமுந் தாதுவிறல்
வாகுவைக் காக்கவில்லையோ
வானவர்க் கரசன்ம கன்கனவில் வந்துமன
மாறமொழி கூறவில்லையோ
அன்னஞ் செறிந்தவய லருணகிரி நாதருக்
கருளொளி வழங்கவில்லையோ
ஐயகோ பாவியென் றெந்தனைத் தள்ளிவிட
லமையுமோ வதுநீதியோ
கன்னெஞ்ச மோகருணை யில்லையோ கவலையொழி
கந்தவன மதனில்வாழுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தவனநாதர் பதிகம்

பாவலர்கள் செந்தமிழ்த் தொடையமுது பருகுமுன்
பன்னிரு திருச்செவிகளுட்
பாவியே னேழைவிண் ணப்பம் புகுந்திடப்
பகருமொரு செவியில்லையோ
எவரையு நோக்கின் னருள்பொழியு முன்கருணை
யீராறு விழிகளுள்ளே
என்னிலம் பாட்டைக் கெடுக்குங் கடைக்கணோக்
கீயவொரு விழியில்லையோ
தேவமரு மீராறு செங்கையி லென்கவலை
சேதிக்க வொருகையிலையோ
தீர்த்தப் பெருங்கருணை வெள்ளத்தில் மலவிடாய்
தீர்க்கவொரு துளியில்லையோ
காவல்புரி கடமையுன் மீதில்லை யோமனக்
கவலையொழி கந்தவனம்வாழ்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

ஐம்புலக் கடகளிறு மாங்கார கோளரியு
மழல்விழிச் சினவுழுவையு
மாசைப் பசாசமும் வஞ்சகக் கரடிகளு
மாகா மனக்குரங்கும்
வெம்புகா மத்தீயு மெங்குமிடர் புரிபிறவி
வெங்கான கம்புகுந்தே
வேதனைப் பட்டுமிடி பிணியெனும் மறவரால்
மெய்ப்பொருள்கள் சூறைபோக
நம்புதுணை காணாது நாடொறும் வருந்துமிந்
நாயேனை யாளவருவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவனநாதர் பதிகம்

நங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
ஞானமுரு வானகுமரா
கம்பகும் பக்கட கரிக்கிளைய சண்முகா
கந்தவன மதனில்மேவுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

எந்தைமுரு காபரங் குன்றின்முரு காபழனி
யோகத் துறையுமுருகா
ஈசமுரு காநல்லை வாமுரு காமலைக
ளேறிவிளை யாடுமுருகா
செந்திமுரு காபிறவி சிந்துமுரு காகுமர
சிங்கமுரு காவடியவர்
சிந்தைமுரு காவெண்கண் வந்தமுரு காபனிரு
செங்கைமுரு காகதிரைவாழ்
தந்தைமுரு காவெட்டி குடியில்முரு காமுனிவர்
முன்னுமுரு காவென்வினை
மோதுமுரு காபிணிகள் காதுமுரு காமிடி
முடித்தமுரு காகலியுகக்
கந்தமுரு காவெனைக் காக்கமுரு காபொழிற்
கந்தவன மதனில்வாழுங்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேன்முருகனே.

திருச்சிற்றம்பலம்.

**கந்தவனநாதர் பதிகம்**
**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பொலிகண்டி கந்தவனம்

இலங்கையில் முருகப் பெருமானின் அருளொளி வீசும் தலங்களில் கந்தவனமும் சிறப்புடைய ஒன்று. இது அருணகிரிநாதரால் **"உறவுசிங்கிகள்"** என்று தொடங்கும் திருப்புகழால் பாடப்பெற்ற உயர்ந்த குகஸ்தலம். ஈழத்து ஆறுபடை வீடுகளில் இதுவுமொன்று. **கந்தவனக்கடவை, கந்தவனம், ஸ்கந்தாரண்யம், கந்தசுவாமி கானகம், முருகவனம்** எனப்பல பெயர்களால் அழைக்கப்படும் இத்திருக்கோவில் யாழ்ப்பாணத்தின் வடகடற்கரையில் பொலிகண்டி எனும் சிற்றூரில் இயற்கையெழில் சூழ அமைந்துள்ளது.

இலங்கையில் இங்கே மட்டுமே மூலவர் வள்ளி தெய்வானையுடன் கூடிய சண்முகராகக் காட்சியளிக்கிறார். தலவிருட்சம் வன்னி தீர்த்தம், நறுநீர்க்கேணி, மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புக்களும் அமையப் பெற்ற இக்கோவில் மிகவும் புராதனமானதாகும். கந்தபுராணம் தோன்றுமுன்பே இக்கோவில் தோற்றம் பெற்றுள்ளது. ஏனெனில் கந்தபுராணத்தின் மூலமாகிய வடமொழிக் கந்தபுராணத்தின் ஒரு பகுதியாகிய தஷிணகைலாய மான்மியத்தில் இக் கோவிலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இக் கோவிலின் தோற்றம் பற்றிக் கூறப்படுவதாவது:- முருகப் பெருமான் சூரனாதியர்களை அழித்து தெய்வயானை வள்ளி ஆகிய சக்திகளை மணந்த பிற்பாடு பல தலங்கள் சென்று வேதாரண்யத்தை அடைந்து அங்கிருந்து வீரவாகு தேவர் உட்பட்ட இலக்கத்தொன்பது வீரர்கள் கின்னரர் கிம்புருடர் சப்தரிஷிகள் தேவர்களுடன் கதிர்காமம் செல்வதற்காக மரக்கலமேறிக் கடல் கடந்து காங்கேயன் துறையடைந்து பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து மரக்கலமேறி வந்து பொலிகண்டிக் கரையை அடைந்து அங்கு சூமிவனமாயிருந்த (வன்னிவனம்) இடத்தின் கண்கோவில் கொண்டெழுந்தருள விரும்பி விசுவகன்மாவை நோக்கி "இங்கே அழகிய திருக்கோவில் ஒன்று இயற்றுக" எனப் பணிக்க அக்கணமே விசுவகன்மாவும் ஆகமவிதிப்படி அழகிய கோவிலை அமைத்ததாகவும் அப்போது முருகப் பெருமான் தேவியருடன் அங்கு எழுந்தருளி பிரம்மா, மகாவிஷ்ணு, இந்திரன் முதலாகிய தேவர்கள் முருகப்பெருமான் கடல் மார்க்கமாக மரக்கலப் பிரயாணம் செய்த தோஷம் நீங்கும்படியாக வெகுவிமரிசையாக மகாபிஷேகம் செய்து வழிபட குகப் பெருமான் அவர்களுக்கு அருள் மழை பொழிய அவ்வன்னிவனம் அன்றுமுதல் "கந்தவனம்" என்ற திரு பெயருடன் சிறந்து விளங்கயிதாகவும் கூறப்படுகிறது. இங்கிருந்து முருகப்பெருமான் கடல்மார்க்கமாகப் புறப்பட்டு கோணமலையை அடைந்து அதன்பின்பு கதிர்காமம் சென்றதாகக் கூறப்படுகிறது.

இத்திருத் தலத்திலுள்ள சுவாமி கல்யாண வேலவராவர். இங்குள்ள பழைய மூலவராகிய "பழயவர்" என அழைக்கப்படும் அழகிய சண்முகர் சோழர்காலத்தில் வடிக்கப்பட்ட விக்கிரகமாகும். சோழர் காலத்தில் முத்தாரசோழன் எனும் சோழ மன்னனின் ஆட்சியில் சில்ப்ப முனிவர் என அழைக்கப்பட்டு வந்த முருக பக்தராகிய சிற்பி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிக்கலில் கருங்கல்லில் அழகிய சண்முக வடிவத்தை செதுக்கி வடித்தார். அதனழகைக் கண்டு எல்லோரும் ஆனந்தித்து மகிழ்ந்தனர். அதிக மகிழ்ச்சியால் அம்மன்னன் சிறுநோக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவனாகி இச்சிற்பி இதேபோல் வேறுசிற்பம் செய்வானாகில் தனது ஊரின் கண்ணுள்ள இவ்விக்கிரகத்திற்கு நிகராகிவிடுமே என்றெண்ணி அச்சில்ப்ப முனிவரின் பெருவிரலைத் தானமாகப் பெற்றுவிட்டான். ஆனாலும் அச்சிற்பி மனங்கலங்காது முருகப் பெருமானை நினைத்தவண்ணம் எட்டுக்குடி சென்று அங்கும் அழகிய சண்முகப் பெருமானை வடித்தார். அங்கும் அவ்வூர் மக்கள் மன்னனின் சிந்தனை போல தாமும் தூரபிமானம் கொண்டவர்களாகி அச்சில்ப்ப முனிவரின் கண்களைப் பிடுங்கி எடுத்தனர். முருகப் பெருமானின் திருவிளையாடல் என எண்ணிக் கொண்ட சில்ப்ப முனிவர் என்கண் சென்றது என்று மனம் சற்றேனும் நெகிழாது ஓர் சிறுமியின் உதவியுடன் சண்முகப் பெருமானை செதுக்கும் போது உளிதவறி அவரின் கையில்பட்டு கையை ஊனப்படுத்தியதால் அதிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து கண்ணில் பட சில்ப்ப முனிவர் கண்பார்வை பெற்றார். அச்சில்ப்ப முனிவரால் இன்னொரு விக்கிரகம் அமைக்கப்பட்டது. அவ்விக்கிரகம் கடல் மார்க்கமாக குமாரபுரத்தை அடைந்து அங்கு வைத்துப் பூஜிக்கப்பட்டதாகவும் போர்த்துக்கேயர் காலத்தில் அவ்விக்கிரகம் கந்தவனத்திற்கு கொண்டுவரப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்ததாகவும் கூறுவர். இச்சில்ப்ப முனிவரால் வடிவமைக்கப்பட்ட **சிக்கல் சிங்கார வேலவர், எட்டிக்குடி வேலர், எண்கண் வேலர், கந்தவனத்துக் கல்யாண வேலர்,** ஆகிய நால்வரும் ஒரே அமைப்பையுடையவர். அதாவது இந்திரமயில் இடதுபுறம் திரும்பி நிற்க அதில் ஆறுமுகப் பெருமான் பன்னிருகரங்களுடன் அமர்ந்திருக்க அருகில் இருபுறமும் தேவியர்கள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இவ்விக்கிரகங்கள் நான்கிலும் ஆறுமுகனுடன் சேர்ந்து திருவாசியும் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கந்தவனத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்ட சண்முகரால் கோவிலும் ஊரும் சிறந்து விளங்கின. பலர் இவ்விறைவனை வேண்டித் தவமிருந்து தாம் விரும்பியதைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கோயிலிற் பூசை செய்த குருக்கள் அபிஷேகம் செய்யும் போது அபிஷேகக் குடம் தவறி வீழ்ந்து சுவாமியின் இடது புற வரதகரத்தை ஊனப்படுத்தியது. இதனால் இவ்விக்கிரகத்தை கடலில் இடுவதற்கு எண்ணியபோது முருகப் பெருமான் பக்தர் ஒருவரிற்கு கனவில் தோன்றி தம்மைக் கடலில் இட வேண்டாமென்றும் தம்மை ஆலய உள்வீதியிலுள்ள வன்னிமர நிழலில் பிரதிட்டை செய்யுமாறும் கட்டளையிட அதே போல் இப்பழயவர் வன்னிமர நிழலில் கோவிலமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டார். கும்கோணத்திலிருந்து இதே போல் அமைப்புடைய மிகவும் பிரமாண்டமான சண்முக விக்கிரகம் கொண்டுவரப்பட்டு மூலவராக வைத்து வழிபடப்படுகிறது. இச்சம்பவம் 1905 ஆம் ஆண்டளவில் நடைபெற்றது.

இதே போல் இங்குள்ள ஆறுமுகநயினார் என அழைக்கப்படும் எழுந்தருளி சண்முகர் இத்தலத்திற்கு கிடைக்கப் பெற்றது மிகப் பெரும் வரப்பிரசாதமாகும். அழகிய வடிவத்திலும் மிகப் பெரிய உருவத்திலும் சிறந்த அருளிலும் தனக்கு நிகரில்லாமல் அமையப் பெற்ற திவ்விய ரூபமுடையது. இச்சண்முகரைப் போல இந்தியாவிலோ இலங்கையிலோ பெரிதாகவும் அழகியதாகவும் அமையப் பெறவில்லை. இச்சண்முகர் 1928ஆம் ஆண்டளவில் இவ்வாலயத்துத் தெற்கு வீதியில் வைத்து வார்ப்பிக்கப்பட்டதாகும். அதாவது அப்போது இத்திருக்கோவிலைப் பராமரித்து வந்த ஆதீன கர்த்தர் திக்கம் செல்லையாபிள்ளை தலைமை வகிக்க பொலிகண்டி மக்கள் பலரும் சேர்ந்து இந்திய இலங்கைச் சிற்பிகளால் இத்திருவுருவம் கருக்கட்டி பஞ்சலோகத்தால் வார்ப்பிக்கப்பட்டது. இதன் போது முருகப் பெருமானின் திருவருளால் அங்கு கூடியிருந்த பலர் தாமணிந்திருந்த பல ஆபரணங்களையும் (தாலி ஈறாக) தமை மறந்து அப்பஞ்சலோகத்தில் சேர்ப்பித்தனர் என்பது நெகிழ்ச்சிக்குரியது. இவ்வாறு பல பெருமைகளைத் தமக்குள் கொண்ட இச்சண்முகர் பவனிவருவது தேரிற்கும் சூரன்போர் உற்சவத்திற்கும் மட்டுமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய தினங்களில் முத்துக்குமார சுவாமியும் காத்திகேயரும் எழுந்தருளுவர். ஆனி மாதம் மகோற்சவம் 15 தினங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14 ஆம் நாள் தேர்த்திருவிழாவும் 15ஆம் நாள் தீர்த்தத்திருவிழா கந்தவனப் பெருமானிற்குச் சொந்தமான ஊரணி சமுத்திரக் கரைக்குச் சென்று நடைபெற்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெறும். அதே போல ஸ்கந்தசஷ்டித் திருவிழாவிலும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நான்காம் நாள் தாரகாசுர சம்காரமும் 5ஆம் நாள் சிங்கமுகாசூர சம்காரமும் 6ஆம் நாள் சூரன் போரும் மிகவும் சிறப்பாக நடைபெறும். இலங்கையில் இங்கேயே சூரன் போர் உற்சவம் வெகுசிறப்பாக இடம் பெறுவது என்பது குறிப்பிடத்தக்கது. மாதாமாத கார்த்திகை உற்சவத்திற்கு காரத்திகேய சுவாமி வெளிவீதி உற்சவமும் பிரதிசுக்கிரவாரம் உள்வீதி உற்சவமும் நடைபெறுவதோடு திருவாதிரை மானம்பூ, தைப்பூசம், மாசிமகம், ஆவணிச் சதுர்த்தி என்பவற்றிற்கு சுவாமிகளின் உற்சவங்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் சிறப்புக்கள் பல. அவற்றில் ஒன்று ஆலயத்தீர்த்தமாகிய நறுநீர்க்கேணியாகும். முற்காலத்தில் இக்கேணியின் நடுவிலுள்ள கல்லில் கற்பூரம் விளைந்ததாகக் கூறப்படுகிறது. நோயுற்றபலர் இந் நறுநீர்க் கேணியில் நீராடியும் அந்நீரை அருந்தியும் சகல ரோகங்களும் நீங்கப் பெறுவது இன்றுமுண்மை. சிலநூறு வருடங்கட்கு முன் உடுப்பிட்டியூரைச் சேர்ந்த சிவசம்புப்புலவர் என்ற மகானிற்கு கண்பார்வை அற்றுப்போகவே அப்புலவர் முருகனை நினைத்து வருந்த அவரின் கனவில் கந்தவனப் பெருமான் தோன்றி கந்தவனத்திற்கு வந்து நறுநீர்க்கேணியில் நீராடி தம்மைப் பணிந்து நான்மணிமாலை பாடுமாறு பணித்தார். அவ்வாறே அப்புலவர் அந்நறுநீர்க் கேணியில் நீராடி நான்மணிமாலை பாடவும் கண்பார்வை கிடைத்ததாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல குழந்தை அற்றவர்க்கு அக்குழந்தைப் பாக்கியமருளும் மகோன்னத திருத்தலமாகவும் இத்திருப்பதி விளங்குகின்றது. சிறிது காலத்தின்முன் ஆலயத் தெற்குப்புற உள்வீதியில் **"காஞ்சிமா"** என அழைக்கப்பட்டு வந்த மாமரம் ஒன்று கனிகளைத் தந்து வந்தது. அக்கனியை உண்டு கந்தவனப் பெருமானை நினைத்து விரதமிருப்பவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டியது யாவரும் அறிந்தது. காலத்தினால் முதுமையடைந்த அக்காஞ்சிமா பட்டுப் போக அதன் கன்றுமரம் உள்வீதியின் வடமேற்கு மூலையில் நின்று இன்றும் அக்கருமத்தை நிறைவேற்றி வருகிறது. சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் பெற்றோர்கள் இக் கந்தவனத்திலேயே தவமிருந்து அவரை முருகனருளால் பெற்றனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இத்திருக்கோவில் பூஜை முறைகள் அனைத்தும் திருச்செந்தூர் முறைப்படியிலானதாகும். ஏனெனில் திருச்செந்தூரிற்கும் கந்தவனத்திற்கும் முக்கிய தொடர்புண்டு. பாக்குநீரிணைக் கடலின் வடபுறத்தே திருச்செந்தூர் போன்று தென்புறத்தே கந்தவனமும் கடலலைகள் அடிவருட இயற்கையெழில் சூழ அமையப் பெற்றுள்ளது. முருகப் பெருமான் திருச்செந்தூரில் நின்று சூரனுடன் போர்புரிந்த காலத்தில் கந்தவனத்தில் பாடிவீடமைத்து இருந்ததாகவும் இந்தியாவிலுள்ள ஆறுபடை வீடுகளிற்கும் இக்கோவில் ஓர் பாடிவீடாக அமையப் பெற்றதாகவும் புராணக் கதைகள் கூறுகின்றனர்.

இத் திருக்கோவில் பூஜைகள் நவிண்டிற் பிராமணர் குலத்தவர்களால் பலதலமுறையாக செய்யப்பட்டு வருகின்றன. தினமும் ஐந்து காலப்பூஜைகள் நடைபெறுகின்றன. இக் கோவில் மீது பல மகான்களும் புலவர்களும் கல்விமான்களும் பிரபந்தங்கள் பல பாடியுள்ளனர். அவ்வகையில் அருணகிரிநாதர் திருப்புகழும், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் நான்மணிமாலையும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நான்மணிமாலையும் பாடி அருள் பெற்றுள்ளனர். மேலும் பலர் தனிப்பட்ட பல பாடல்கள் பாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துச் சித்தர்களும் யோகிகளும் இக்கோவிலில் வழிபட்டு அற்புதங்கள் பல நிகழ்த்தியுள்ளனர். அவ்வகையில் செல்லப்பா சுவாமிகள் **"ஓடுங்கடா ஓடுங்கடா கந்தவனத்தில் நல்ல சரக்கிருக்குது"** என்று கூறி தம் சீடர்கள் பலரை இங்கே யாத்திரை செய்ய ஏவியுள்ளார். அதேபோல சிவயோக சுவாமிகளுக்கும் கந்தவனத்திற்கும் பல தொடர்புகள் இருந்துள்ளன. யோகசுவாமிகள் தம்சீடர்களுடன் கால் நடையாக யாத்திரை செய்து இங்குவந்து கந்தப் பெருமானை வழிபடுவார். 1940ஆம் ஆண்டளவில் சுவாமிகள் கோவில் வந்த போது இங்கு கோவில் நிதித்திய மேளத்திற்கு இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டு நியமித்திருந்த "வடிவேலு" எனும் நாதஸ்வர வித்துவானை அழைத்து பஜனை படிக்குமாறு கூறி தாமும் சேர்ந்து பஜனை பாடினார். இங்கே பஜனை முறையைத் தொடக்கியவர் இவரே. அப்போது கோவிலைப் பராமரித்து வந்த சைவப்பெரியார் திக்கம் செலலையாபிள்ளை ஓர்நாள் திருத்தணிகைப்புராணம் படித்துக் கொண்டிருந்த போது பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை உட்பட்டவர்களுடன் வந்து தமக்கு வணக்கம் செலுத்திய செல்லையாபிள்ளையை உட்கார்ந்து படிக்கச் சொல்லித் தாமும் இருந்து அப்புராணத்திற்கு பயன் சொன்னதும் இனிமையான சம்பவமாகும்.

சிவயோக சுவாமிகள் கந்தவனத்தில் **"ஆடுமயிலே"** என்ற பாடலைப்பாட மயில் ஆடிய அற்புதம் நிகழ்ந்தது. சுவாமிகள் கந்தவனத்திற்கு வரும் போதெல்லாம் பலர் சுவாமியைத் தரிசிக்கக் கூடுவது வழக்கம். அவ்வாறு கூடுபவர்களுக்குள்ள குறைகளை நீக்கி ஆசிகள் வழங்குவது சுவாமியின் வழக்கம். அவ்வகையில் கந்தவன ஆதீனகர்த்தர் செல்லையா பிள்ளையின் பாரியார் நெடுங்காலமாக ஓர்வகையான வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சுவாமி கோவிலுக்கு வந்த சமயம் அவரைத் தரிசிப்பதற்காக பெரிய தேரடியில் அம்மாது வயிற்றுபாதையுடன் அமர்ந்திருந்தார். இதனை குறிப்பாலுணர்ந்த சுவாமிகள் அவ்வயிற்றுவலியைத் தாமே வாங்கி மிகவும் வேதனைப்பட்டுத் தெளிந்தார். அன்றிலிருந்து திருவாட்டி செல்லையாபிள்ளைக்கு இறக்கும் வரையில் வயிற்றுவலி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல அற்புதங்களை இங்கே நிகழ்த்திய யோக சுவாமிகள் செல்லையாபிள்ளை வீட்டில் தம் சீடர்களைக் கொண்டு தோட்டம் செய்வித்தார் என்பதும் குறிப்பிடற்பாலது.

இவ்வாறு நயினாதீவு சுவாமிகள் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் போன்ற பெரியவர்கள், மகான்கள், சித்தர்கள் எனப்பலர் இத்திருக்கோவிலில் தங்கித் தமது தவ வாழ்க்கையை மேற்கொண்டு சிறப்பெய்தியுள்ளனர். இத்துணைப்பல சிறப்புக்களைப் பெற்று விளங்கும் பொலிகண்டி கந்தவனத்தை திருவாளர் திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தவர்கள் பரம்பரையாகப் பரிபாலித்து வருவதோடு ஆலயத்தின் பழமையும் சிறப்பையும் மிகவும் பேணிப் பாதுகாத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சகல விதமான சிறப்புக்களையும் பெருமையையும் பெற்ற இத்திருக்கோவிலின் அழகையும் இங்குள்ள கந்தவனப் பெருமானின் அருளையும் நாம் தரிசித்துப் பெருமை பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிலையொன்றி நீ வருந்த வேண்டாம்"

இலையென் றிரங்கி யிரக்கப் புகுந்து
நிலையொன்றி நீ வருந்த வேண்டாம் - அலையொன்றி
மன்று துறைக் கந்தவனத் தருகே யாறுமுகப்
பொன்மலையொன் றுண்டங்கு போ.

மேற்படி பாடல், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களால், பொலிகண்டி கந்தவன நாதர் மேல் பாடப்பெற்ற "கந்தவனநாதர் நான்மணிமாலை" நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். 1928 ஆம் ஆண்டு இந்நூல், சோமசுந்தரப் புலவரின் மாணாக்கராகிய திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால், மட்ராஸ் சிவகாமி விலாசம் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இற்றைக்கு 78 ஆண்டுகளுக்கு முன்னே, "கந்தவனத் தருகே ஆறுமுகப் பொன்மலை ஒன்று உண்டு அங்கு போ" எனத் திருவாய் மலர்ந்திருப்பது ஒருகணம் சிந்திக்கத்தக்கதாகும். திரவியம் போலப் பாடல்கள் படைக்கப்பட்டுள்ளன. மிகவும், வடிந்த நிலையில் காணப்பட்ட இந்நூலை "வாசித்துப் பார்" எனக் கட்டளையிட்டது போல என்மனம் ஈர்க்கப்பட்டிருந்தது. உண்மையிலே கந்தவனப் பெருமானின் தித்திக்கும் பாடல்கள் இதே போலவே தான், செல்வச்சந்நிதி முருகனுக்கும் அளவெட்டி அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயாவும் அறுபதுகளில் எழுதிய நூலினைத் தேடுகிறேன். கிடைக்கவில்லையே என்ற கவலை. இத்தகு பாடல்களையெல்லாம், காலத்தின் தேவை கருதி மீண்டும் பதிப்பிக்க வேண்டிய சூழ்நிலையை முருகப்பெருமான் உண்டாக்க வேண்டும் என யான் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனநாதர் நான்மணிமாலையும் பதிகமும் கொண்ட இந்நூல், சிறிய எழுத்துக்களால் கோர்க்கப்பட்ட ஐம்பது பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. சம்பந்தப்பட்ட ஆலயப் பரிபாலனப் பெரியார்களின் அனுமதியோடு, மேற்படி நூலினை மறுபதிப்புச் செய்வதற்கு யாராவது ஆவன புரிவீர்களாக இருந்தால் அவர்கள் புண்ணியவான்களேயாவர். ஞானச்சுடர் மூலம் முருகன் விடை தருவான் என்பது எனது நம்பிக்கை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org